

புரட்சிப் **பெரியார் முழக்கம்**

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | பிப்ரவரி 28, 2019 | புரட்சி 18 | முழக்கம் 07 | விலை: ரூ.3.00


## அய்.அய்.டி. – அய்.அய்.எம்.களில் பார்ப்பன ஆதிக்கம்!

# எஸ்.சி.-பி.சி.க்கு கிடைத்துள்ளது 9 சதவீதம் மட்டுமே!

முன்னேறிய ஜாதிப் பிரிவினருக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டைப் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு செய்யும் சட்டத்திருத்தத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்துள்ளது நடுவண் ஆட்சி; ஆனால் அய்.அய்.டி., அய்.அய்.எம். போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பேராசிரியர்களாக பார்ப்பனர் உயர்ஜாதியினர் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது. தலித், பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை மிக மோசமான நிலையில் இருப்பதை அண்மையில் வெளிவந்துள்ள புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன.

கடந்த டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் மத்திய மனிதவளத் துறை அமைச்சகம் சமர்ப்பித்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள தகவல்கள் இவை:

இந்தியன் ‘இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட்’ (அய்.அய்.எம்.) என்ற உயர்கல்வி நிறுவனத்தில் 784 பேராசிரியர் பதவிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது.

இதில் ‘தலித்’ பிரிவைச் சார்ந்தவர்கள் 8 பேர் மட்டுமே. பழங்குடிப் பிரிவைச் சார்ந்தவர் - 2 பேர் மட்டுமே. பிற்படுத்தப்பட்டோர் 784 பதவிகளில் 27 பேர் மட்டுமே. மொத்த பேராசிரியர் பதவிகளில் தலித், பிற்படுத்தப்பட்டோரின் பிரதிநிதித்துவம் 6 சதவீதம் தான். 95 சதவீதம் பார்ப்பனர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள்.

அய்.அய்.டி.யில் என்ன நிலை?

இது இன்னும் மோசம். நடுவண் ஆட்சி 8856 பேராசிரியர் பதவிகளை நிரப்பிக் கொள்வதற்கு அனுமதி அளித்திருக்கிறது. இதில் திறந்த போட்டியில் 4876 பேர் இடம் பெற்றுள்ளனர்.

8856 பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 329 பேர். தலித் 149 பேர்; பழங்குடியினர் 21 பேர்.

மொத்தமுள்ள 23 அய்.அய்.டி.களில் பட்டியல் இனப் பிரிவினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட் டோர் அனைவரும் சேர்ந்து பெற்றிருப்பது 9 சதவீத இடங்கள் மட்டுமே!

சில அய்.அய்.டி. - அய்.அய்.எம். நிறுவனங்களில் ஒருவர்கூட பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்தவரோ, பிற்படுத்தப்பட்டவரோ இல்லாமல் இருக்கும் அவலம் நீடிக்கிறது.

மும்பை, கான்பூர், காரக்பூர் உள்ளிட்ட 15 அய்.அய்.டி.களில் ஒரு பழங்குடிப் பிரிவினர் கூட பேராசிரியராக இல்லை. கோவா, தார்வார்டு அய்.அய்.டி.களில் ஒரு பிற்படுத்தப்பட்டவர்கூட இல்லை.

அண்மையில் சுயாட்சி பெற்ற அய்.அய்.எம். நிறுவனங்களில் 16இல் ஒரு பழங்குடியினர்கூட இல்லை. 16 நிறுவனங்களில் ஒரு தலித் கூட இல்லை. 7 அய்.அய்.எம். நிறுவனங்களில் ஒரு பிற்படுத்தவர்கூட இல்லை.

18 அய்.அய்.எம். நிறுவனங்களிலும் இடஒதுக்கீட்டுப் பிரிவினர் பெற்றிருக்கும் பதவிகள் 1.5 சதவீதம் மட்டுமே.

மத்திய மனித வளத்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் இது பற்றிக் கூறுகையில், “பணிக்கு விண்ணப்பிக்கும் தொடக்க நிலையில் மட்டுமே, இடஒதுக்கீட்டுப் பிரிவினரைச் சேர்த்தால்தான் உண்டு. உரிய விண்ணப்பதாரர்கள் கிடைக்கா விட்டால் பிறகு இடஒதுக்கீட்டுப் பிரிவை முழுமையாக்கும் முயற்சிகளில் ஈடுபட மாட்டோம். வேறு சமூகத்தவரைக் கொண்டு நிரப்பி விடுவோம்” என்று ஆணவத்துடன் பதிலளித்துள்ளார்.

“உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட தகுதிக்கு உரிய விண்ணப்பதாரர்கள் இடஒதுக்கீட்டுப் பிரிவுகளில் இல்லை. எனவேதான் அவர்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லை” என்று அய்.அய்.டி. தரப்பில் உள்ள அதிகாரிகள் கூறுகிறார்கள்.

இந்தியாவுக்குள் செயல்படும் அய்.அய்.டி.களில் பணியாற்றும் தகுதி இங்கே உள்ள பெரும்பான்மை மக்களுக்கு இல்லை என்று இவர்கள் வாதிடுவதன் வழியாக பெரும்பான்மை சமூகத்தை அவமதிக்கிறார்கள்.

கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதியை விழுங்கிக் கொண்டிருக்கும் இந்த உயர்கல்வி நிறுவனங்கள் தங்களின் ‘தகுதி திறமை’யால் நாட்டுக்கு செய்த பங்களிப்பு என்ன?

அயல்நாட்டுக்கு சேவகம் செய்ய ஓடுவது தான்!

இடஒதுக்கீட்டுப் பிரிவில் தகுதியானவர்கள் கிடைக்காத நிலையில் உயர்ஜாதிப் பிரிவிலிருந்து இடஒதுக்கீட்டுக்கான இடங்களை நிரப்பிக் கொள்ளலாம் என்று அய்.அய்.டி., அய்.அய்.எம். நிறுவனங்களுக்காக பார்ப்பன அதிகார வர்க்கம் தனியாக விதியை வகுத்து வைத்திருக்கிறது. அதுதான் இவை எல்லாவற்றுக்கும் காரணம்.

இது தவிர பல்கலைக்கழக நிதிக் குழு பேராசிரியர் நியமனங்களில் இடஒதுக்கீட்டை மொத்தப் பணியிடங் களின் அடிப்படையில் பின்பற்றாமல் துறை வாரியாக நியமிக்கும் ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. இதனால் இடஒதுக்கீடு மேலும் பாதிக்கப்படும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி உலகத்தில் தரம் வாய்ந்த 500 பல்கலைக் கழகங்களில் ஆய்வுப் பட்டம் பெற்றவர்கள் இந்திய பல்கலைக்கழகங்களில் நேரடியாகவே பேராசிரியர்களாக நியமிக்கலாம் என்ற உத்தரவையும் பல்கலைக்கழக நிதிக்குழு பிறப்பித்திருக்கிறது.

இது வரை இப்படி உலக பல்கலைக்கழகங்களில் படித்த ஆய்வாளர்கள் இந்தியாவில் பணிக்கு சேர மேற்பட்டப் படிப்பில் குறைந்தது 55 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் தகுதித் தேர்வான ‘நீட்’ தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனைகள் இருந்தன. இப்போது அவை அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன. எழுத்துப்பூர்வ தேர்வு ஏதும் எழுதத் தேவையில்லை என்று அறிவித்து விட்டார்கள்.

மோடி ஆட்சி உயர்கல்வி நிறுவனங்களில் சமூக நீதியைக் குழித் தோண்டி புதைக்கும் நடவடிக்கைகளை கடைசி நேரத்தில் அவசர அவசரமாக மேற்கொண்டு வருகிறது.

## 7 தமிழர் விடுதலை: மார்ச் 9 மனித சங்கிலி போராட்டத்தில் கழகத் தோழர்களே, குடும்பம் குடும்பமாக பங்கேற்பீர்!

7 தமிழர் விடுதலையை வலியுறுத்தி, மார்ச் 9 ஆம் தேதி சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், புதுவையில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை மனித சங்கிலி போராட்டம் நடக்க இருக்கிறது. தமிழக அமைச்சரவை முடிவுக்குப் பிறகு ஒப்புதல் தர வேண்டிய தமிழக ஆளுனர் நெறிமுறைகளுக்கு மாறாக கிடப்பில் போட்டு வைத்துள்ளார். ஆளுநர் தமிழ்நாட்டின் ஒருமித்த குரலை தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி நசுக்கி வருவதைக் கண்டித்து நடக்கும் இந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பெருந்திரளாக குடும்பத்துடன் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


## தற்போது விற்பனையில்

**‘நிமிர்வோம்’** – பிப்ரவரி 2019 இதழ்

- தலையங்கம் - அண்ணா தந்த அறிவாயுதங்கள்
- வைதீகத்தைத் துளைத்தெடுத்த அண்ணாவின் எழுத்துகள்
- கீழ்வெண்மணி மறைக்கப்பட்ட வரலாறு
- 10 சதவீத ஒதுக்கீடு : ஒரு ஆய்வு
- பெரியார் - ஃபிரெட்ரிக் டக்ளஸ் அடிமை சுதந்திரத்துக்கு எதிராக விடுதலைக் குரல்
- மோடி பூமியின் காவலரா?
- பார்ப்பன அதிகார வர்க்கத்தால் சூறையாடப்பட்ட வங்கிப் பணம் ரூ.70,000/- கோடி
- மதமற்ற குழந்தை வளர்ப்பே சிறந்தது...சமீபத்திய ஆய்வு முடிவுகள்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...




தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745/7299230363 www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

# திருமண மந்திரங்கள் : மு.க. ஸ்டாலின் மீது பாய்வோர் பதில் கூறுவார்களா?

பிராமணப் புரோகிதர் தலைமையில் நடக்கும் சமஸ்கிருத வைதிக திருமண முறையை ஸ்டாலின் விமர்சித்து விட்டார் என பொங்குபவர்கள், தங்கள் வீட்டு திருமணங்களில் இந்த மந்திரங் களின் உண்மை பொருளை அறிந்து கொள்ள, சமஸ்கிருதத்துக்கு பதிலாக தமிழிலேயே சொல்ல வலியுறுத்துவார்களா?

இதோ அவாளே வேதம் ஓதி, அவாளே விளக்கமும் தருகிறாளே! தமிழில் இந்த விளக்கங்களை அளித்தவர் அக்னிஹோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் என்ற வேத சமஸ்கிருத அறிஞர்..

“சோமஹ ப்ரதமோவி வித கந்தர்வ விவிதே உத்ரஹ த்ருதியோ அக்னிஷ்டே பதிஷ் துரியஷ்தே மனுஷ்ய ஜாஹ”

இந்த மந்திரம் மணமகளை நோக்கி சொல்லப்படுகிறது. நீ முதலில் சோமனுக்கு உரியவளாக இருந்தாய், பின்பு கந்தர்வன் உன்னை அடைந்தான், பின்பு அக்கினி உன்னை அடைந்தான். இப்பொழுது நான்காவதாக ஒரு மானிடனை அடைகிறாய். இதுதான் இந்த மந்திரத்தின் அர்த்தம்.

அதாவது மணமகள் ஏற்கனவே மூன்று பேருக்கு மனைவியாக இருந்தவளாம். இப்பொழுது நான்காவதாக ஒருவனுக்கு மனைவியாகப் போகிறார்களாம்.

ஸப்தர்ருஷ்ய: ப்ரதமாம் க்ருதிகாநா மருந்ததீம் / யத் த்ருவதாகும் ஹ நிந்யுஷ் ஷட்க்ருத்திகா முக்ய யோகம் வஹந்தீய மஸ்மாக மேத த்வஷ்டமீ //

“ஸப்தரிஷிகள், கிருத்திகை எனப் பெயர் கொண்ட தங்கள் மனைவிகளுக்குள்ளே முதலான வளான அருந்ததியை எப்படி நிலைத்திருக்கச் செய்தார்களோ, அப்படி மற்ற ஆறு கிருத்திகைகள் அருந்ததியின் முக்கியமான சேர்க்கையைச் செய்கின்றனர். இந்த அருந்ததியைத் தரிசனம் செய்ததால் என்னுடைய இந்த மனைவி எட்டாமவளாக வளர்ச்சி பெறட்டும்.”

“தாம்பூஷன் சிவதமாம் ஏவயஸ்வயஸ்யாம் பீஜம்/

மனுஷ்யா பவந்த்தீயான ஊரு உஷதி/

விஸ்ரயாதையஸ்யா முஷந்தஹா ப்ஷேரே/

பஷேபம் .”

இது வேதத்தில் சொல்லப்பட்ட மந்த்ரம் இதை கல்யாண மேடையிலே பெண்ணையும், மாப்பிள்ளையையும் உட்கார்த்தி வைத்து சத்தமாக சொல்கிறார் வாத்யார் (புரோகிதர்). இந்த மந்த்ரத்தின் அர்த்தம் புரிந்தால் அந்த வாத்யாரை நீங்கள் வாத்சாயணர் என்றுதான் அழைப்பீர்கள்.

அப்படி என்ன சொல்கிறது இந்த மந்த்ரம்?

நான் அவளை கட்டிப்பிடிப்பேன். (அவளோடு உறவு கொள்ளும் பொழுது) அப்போது எங்களது அந்தரங்க பாகங்களை சரியாக பொருந்தச் செய்யுமாறு தேவதைகளே நீங்கள் உதவ வேண்டும்.

இந்த மந்த்ரத்தின் அர்த்தத்தை இதைவிட நாகரிகமாக சொல்ல முடியாது. விளக்கமாக நான் சொல்லியிருப்பேன் என்றால் என் மீது உங்களுக்கு இருக்கும் மரியாதை போய்விடும். அப்படிப்பட்ட மந்த்ரம் அது.

உதீர்ஷ்வாதோ விஸ்வாவஸோ நம ஸேடா மஹேத்வா / அந்யா மிச்ச ப்ரபர்வயகும் ஸஞ்ஜாயாம் பத்யா ஸ்ருஜ/

விசுவாசு என்னும் கந்தர்வனே, இந்தப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பாயாக. உன்னை வணங்கி வேண்டுகிறோம். முதல் வயதிலுள்ள வேறு கன்னிகையை நீ விரும்புவாயாக. என் மனைவியைத் தன் கணவனுடன் சேர்த்து வைப்பாயாக.”

“உதிர்ஷ்வாத: பதிவதீ ஹ்யேஷா விஸ்வாஸூந் நமஸா கீர்ப்பிரீட்டே / அந்யாமிச்ச பித்ருபதம் வ்யக்தாகும் ஸ தே பாகோ ஜநுஷா தஸ்ய வித்தி //

“இந்தப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பாயாக. இந்தப் பெண்ணுக்கு கணவன் இருக்கிறானல்லவா? விசுவாசுவான உன்னை வணங்கித் துதித்துக் கேட்டுக் கொள்கிறோம். தகப்பன் வீட்டிலிருப்பவளும் இது வரை திருமணம் ஆகாதவளுமான வேறு கன்னிகையை நீ விரும்புவாயாக அந்த உன்னுடைய பங்கு பிறவியினால் ஆகிவிட்டதென்பதை நீ அறிவாயாக.”

**குறிப்பு :** திருமணத்துக்கு மட்டுமல்ல, “முதல் இரவுக்கும்” மந்திரங்கள் இருக்கின்றன. முதலிரவில் படுக்கையில் தம்பதிகளுக்கு இடையே படுத்திருக்கும் கந்தர்வனை எழுப்பிப் போகச் சொல்லி தம்பதிகள் உறவு கொள்ள அனுமதி கோருகிறது, மேற் குறிப்பிட்ட மந்திரம். திருமணத்துக்கு பார்ப்பனர்களை வைத்து ‘மந்திரம்’ ஓத விரும்புவோர்கூட முதலிரவுக்கு சாஸ்திரப்படி மந்திரங்கள் ஓதுவதை கைவிட்டு விட்டார்கள். அத்தகைய சடங்குகள் விபரீதமாகிவிடும் என்பதை பகுத்தறிவோடு புரிந்து கொள்ளும் பழமைவாதிகள், திருமணங்களில் புரோகித மந்திரங்களை ஏன் கைவிடக் கூடாது?

காசு கொடுத்து ஐயரை வரவழைத்து இந்த சமஸ்கிருத மந்திரங்கள் ஓதுவதால் என்ன மாறுதல் நடந்துவிடப்போகிறது?

நன்றி : சமஸ்கிருத அறிஞர் ராமானுஜதாதாச்சாரியார்!
(‘இந்துமதம் எங்கே போகிறது?’ நூலில்)

தமிழக அமைச்சராக உள்ள மாஃபா பாண்டியராஜன் என்பவர் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் திருமண மந்திரங்களுக்கு கொச்சையாகப் பொருள் தரப்படுகிறது என்று மு.க. ஸ்டாலினை சாடியதோடு, ஊருக்கு இளைத்தவன் பிராமணன் தானா? வேறு ஜாதியை இப்படிப் பேசுவார்களா? என்று பார்ப்பனரின் வழக்கறிஞராகவே மாறி பேசினார். அக்னி ஹோத்திரம் தாதாச்சாரிகளும் விளக்கத்துக்கு என்ன பதில் கூறுவார்?

# கள்ளக்குறிச்சியில் உயர்ஜாதி இடஒதுக்கீட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம்



20.02.2019 புதன்கிழமை அன்று மாலை 4 மணியளவில் கள்ளக்குறிச்சி மந்தைவெளியில், திராவிடர் விடுதலைக் கழக சார்பில் உயர் ஜாதியினருக்கு 10% இடஒதுக்கீடு வழங்கும் மத்திய அரசின் போக்கை கண்டித்து கள்ளக்குறிச்சி நகர அமைப்பாளர் மு.சங்கர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பாரதிதாசன், கார்மேகம், ஆசைத்தம்பி, நாகராஜ் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், ச.கு. பெரியார் வெங்கட், மாவட்ட செயலாளர க, இராமர், மாவட்ட அமைபாளர் சி,சாமிதுரை, மாவட்ட தலைவர் க. மதியழகன் சங்கை ஒன்றிய அமைப்பாளர் செ.வே. ராஜேஷ், பெரம்பலூர் மாவட்ட தலைவர் துரை. தாமோதரன் நிறைவுரையாற்றினார். காரனுர் மணி நன்றி கூறினார்.

## ஆழ்வார் திருநகரில் 10 சதவீத ஒதுக்கீட்டைக் கண்டித்து கழகப் பொதுக் கூட்டம்

16.02.2019 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆழ்வை ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் உயர்சாதி ஏழைகளுக்கு 10% இட ஒதுக்கீடு என்ற பெயரில் சமூகநீதியை சீர்குலைக்கும் உயர்ஜாதி இடஒதுக்கீட்டைக் கண்டித்து ஆழ்வார் திருநகரியில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஆழ்வை ஒன்றிய திவிக தலைவர் நாத்திகம் முருகேசனார் முன்னிலை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட திவிக தலைவர் கோ.அ.குமார் தலைமை தாங்கினார். திராவிடர் விடுதலைக் கழகப் பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் சிறப்புரையாற்றினார்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் ச.இரவி சங்கர், மாவட்ட அமைப்பாளர் பால். அறிவழகன், மாவட்ட பொருளாளர் சந்திரசேகர், பால்ராசு, பிரபாகரன், ஆதித் தமிழர் கட்சியைச் சேர்ந்த இரா.வே.மனோகர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடியில் ‘திராவிடம் அறிவோம்’ விவாத நிகழ்வு



17.02.2019 அன்று தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் “திராவிடம் அறிவோம்” என்ற பெயரில் புதிய தோழர்களுக்கான கேள்வி- பதில் நிகழ்வு நடைபெற்றது.

இயக்கத்தில் இணைய விரும்பும் தோழர்கள், தோழமை இயக்க தோழர்கள் பெரியார், அம்பேத்கர், திராவிடம், சமூக நீதி, இட ஒதுக்கீடு குறித்த அய்ய வினாக்களுக்கு விடைதேடும் நிகழ்வாக நடைபெற்றது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் தோழர்களின் அய்ய வினாக்களுக்கு விடையளித்தார். புதிய தோழர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். மிகச்சிறப்பான, ஆக்கப்பூர்வமான நிகழ்வாக இது அமைந்தது.

## மணிகண்டன்–தேன்மொழி மணவிழா மகிழ்வாக கழக வளர்ச்சிக்கு ரூ.10,000 நன்கொடை

மேட்டூரில் கழக மாவட்ட செயலாளர் சி. கோவிந்தராஜன்-மு.கீதா இணையரின் மகள் தேன்மொழி-மணிகண்டன், ஜாதி மறுப்பு மண விழா, கடந்த பிப்ரவரி 3ஆம் தேதி மேட்டூரில் நடந்தது. மணவிழா மகிழ்வாக தோழர் சி.கோவிந்தராஜன், ரூ.10,000 கழக வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

கடந்த வார இதழில் வெளி வந்த மணவிழா செய்தியில் பிப்.3 என்பதற்கு பதிலாக ஜனவரி 3 என்று தவறாக வெளி வந்துவிட்டது. மணமகளின் தந்தை சி. கோவிந்தராஜன் பெயரில் கி. கோவிந்தராஜன் என்றும் தவறாக வெளி வந்துள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்)

வாசகர்களுக்கு...

பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் தொடர் – இந்த இதழில் இடம் பெறவில்லை. அடுத்த வாரம் தொடரும்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896

# இனப்படுகொலையை ‘தூசி’யாகக் கருதுகிறாரா இந்து ராம்?

இனப்படுகொலையாளன் இராஜபக்சேவை வைத்து பெங்களூரில் கூட்டம் நடத்தினார், இந்து குழுமத் தலைவர் ராம். அவர் அங்கே வெளியிட்ட கருத்துகளுக்கு மறுப்பு:

“போரை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காகவும் உள்கட்டமைப்பை கட்டியெழுப்பியதற்காகவும் நீங்கள் பாராட்டப்பட்டீர்கள். தமிழ்ச் சமூகத்தின் பொருட்டு கொஞ்சம் தூசி துடைக்கப்பட வேண்டியுள்ளது.”

2019, பிப்ரவரி 9 அன்று பெங்களூருவில் மேற்கண்ட வரிகள் ஒரு கேள்வியாக இந்துக் குழுமத்தின் தலைவர் என்.ராமால் இலங்கையின் முன்னாள் அதிபர் இராசபக்சேவிடம் கேட்கப் பட்டதாகும்.

வாகனத்தை ஓட்டினால் தூசி படியத் தான் செய்யும். அதற்காக வாகனத்தை ஓட்டாமல் இருக்க முடியாது. வாகனத்தை ஓட்டிவிட்டு தூசியைத் துடைக்க வேண்டும் என்று சொல்வது போல் இராசபக்சே நடத்திய போரும், அவர் அதை முடிவுக்கு கொண்டு வந்ததையும் அதைக் கொண்டு வந்த விதத்தையும் அங்கீகரித்த வண்ணம் அதனால் படிந்துகிடக்கும் ’தூசி’ பத்தாண்டுகள் ஆன பின்பும் இன்னும் துடைக்கப்படாமல் இருக்கிறது என்றும் என்.ராம் சொல்கிறார்.

எந்த சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் ஏற்புடன்,”இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்றும் அதற்குப் பன்னாட்டுப் புலனாய்வு நடத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ அந்த சட்டமன்றத்தில் இருந்து சில கி.மீ. தொலைவில் செயல்படும் ஒரு பத்திரிகை குழுமத்தின் தலைவர் அந்த இனப்படுகொலையின் நாயகனாக அறியப்படும் இராசபக்சேவுக்கு அந்த இனப்படுகொலை நடந்து முடிந்து பத்தாண்டுகள் கழித்து புகழாரம்சூட்டியபடி கேட்ட கேள்வி இது.

ஓர் இனப்படுகொலையை இயல்பாக கடந்து செல்லக் கூடிய அந்தப் பத்திரிகைதான் இந்நாட்டின் பாரம்பரியமிக்கப் பத்திரிகைகளில் ஒன்று; சர்வதேச அளவில் அறியப்பட்டது; முற்போக்கானது; கருத்துரிமைக்கும் எழுத்துரிமைக்கும் பேச்சுரிமைக்கும் எழுந்துநிற்பது; இந்துத்துவம், சாதி ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிரானதென அறியப்படுவது; சி.பி.ஐ.(எம்) என்ற இடதுசாரி கட்சியை ஆதரிப்பதென அறியப்படுவது;

இந்தப் போரில் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தமிழ் மக்கள் சொல்கிறார்கள். ஐ.நா. வின் அறிக்கைகள் 70,000 ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர் என்று சொல்கிறது. டப்ளின் தீர்ப்பாயம், பிரமன் தீர்ப்பாயம், சானல் 4 காணொளிகள், சார்லஸ் பெட்ரி அறிக்கை, மனித உரிமைக் கண்காணிப்பகம் (HRW), மக்கள் சிவில் உரிமைக் கழகம் (PUCL), அம்னெஸ்டி எனப் பல்வேறு அமைப்புகள் போரின் பெயரால் இலங்கை அரசப் படைகளால் நடத்தப்பட்ட போர்க் குற்றங்கள், மாந்த குல விரோதக் குற்றங்கள், இனக் கொலைக் குற்றங்களை அம்பலப்படுத்திவிட்டன. ஆயினும் என்.ராம் என்ற ’சனநாயகவாதிக்கு’ அவையெல்லாம் தூசியாகப் படுகிறது!

போரின் போது embedded journalist ஆக சிங்கள இராணுவத்துடனே பயணித்த தி இந்துவின் செய்தி சேகரிப்பாளர் முரளிதர் ரெட்டி, “தமிழ் மக்கள் மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று சொல்லியிருந்த சிங்கள இராணுவம் அப்படியான ஆயுதங்கள் பயன்படுத்தியதை நேரில் கண்டதாகவும், சிங்களப் படை அதிகாரிகளிடம் கேட்ட போது, ‘போரை விரைவாக முடிப்பதற்கு தாங்கள் இதை செய்தாக வேண்டும்’ என்ற பொருள்பட சொன்னதாகவும் ‘Frontline’ இல் எழுதினார். அது போர்க்குற்றமே இல்லை என்று என்ராம் வாதிடுகிறாரா? இல்லை போனது தமிழர்கள் உயிர்தானே, அதற்கு பொறுப்புக்கூறல் என்ற ஒன்று தேவையில்லை என்கிறாரா?

2017 இல் கூட இலங்கையில் ‘Rape Camps’ நடத்தப்படுகிறது; அங்கே ‘இறைச்சி கடையில் இறைச்சியைத் தேர்வு செய்வது போல் தமிழ்ப் பெண்கள் தேர்வு செய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என யாஷ்மின் சூகா என்ற தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த மாந்த உரிமை செயற்பாட்டாளர் சொன்னாரே, அந்த ‘rape camps’ பற்றி வரும் செய்திகளைத் தான் தூசி என்கிறாரா?

உலகிலேயே காணாமலாக்கப்பட்டோரை அதிகமாகக் கொண்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் வருகிறது. பத்தாயிரக் கணக்கான தமிழர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அதில் சரணடைந்தவர்களும் அடங்குவர். சரணடைந்தவர் களில் குழந்தைகளும் அடங்குவர். உலகில் காணாம லாக்கப்பட்டோர் பிரச்சனையில் சரணடைந்தவர் களும் குழந்தைகளும்கூட வருவது இலங்கையில் தான். அப்படி காணாமலாக்கப் பட்டோர் எல்லோரையும் இறந்தவர்களாக கணக்கில் எடுக்குமாறு பிரதமர் இரணில் விக்ரமசிங்கே சொல்கிறார். காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இன்றும் தெருக்களில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் கண்ணீரைத்தான் என்.ராம் தூசி என்கிறாரா?

பத்தாண்டுகள் ஆன பின்பும், தமிழர்களிடம் இருந்து பறித்த நிலங்கள் அவர்களிடம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. நிலங்களை மீட்பதற்காக தமிழர்கள் மாதக் கணக்கில் போராடிக் கொண்டிருக் கிறார்கள். அதைத் தான் இன்னும் துடைக்கப்படாத தூசி என்கிறாரா என்.ராம்?

இன்றைக்கு வரை அரசியல் கைதிகள் விடுவிக்கப் படவில்லை. கடந்த பிப்ரவரி 4 இலங்கையின் சுதந்திர நாளன்று 500-க்கும் மேற்பட்ட கைதிகள் விடுவிக்கவிக்கப்பட்டதில் ஒருவர்கூட தமிழ் அரசியல் கைதி இல்லை. அதற்காக யாழ்ப் பல்கலைக் கழகத்தில் இருந்து மாணவர்கள் நடைப் பயணமாக அனுராதபுரம் சிறைச்சாலையை நோக்கிச் சென்றார்கள். அப்போது கிளம்பிய புழுதியைத் தான் தூசி என்கிறாரா என். ராம்?

2015 ஆம் ஆண்டு தானே முன்மொழிந்து உலகின் ஆகப் பெரிய மாந்த உரிமை மன்றமான ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் நாற்பத்து ஒன்பது நாடுகளின் முன்னிலையில் ஒப்புக்கொண்ட தீர்மானத்தை நான்கு ஆண்டுகள் ஆகியும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை. வருகிற மார்ச் மாதம் 22 ஆம் நாள் ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் இது குறித்து விவாதம் நடக்கவிருக்கிறது. 2009இல் எந்த மன்றத்தில் இலங்கைக்கு பாராட்டுப் பத்திரம் வாசிக்கப் பட்டதோ அந்த மன்றத்தில் அதே இலங்கை பொறுப்புக்கூற வேண்டிய அழுத்தங்கள் எழுவதைத் தான் ‘எஞ்சியிருக்கும் தூசி’ என்கிறாரா என்.ராம்?

> **கடந்த பிப்ரவரி 4 இலங்கையின் சுதந்திர நாளன்று 500 க்கும் மேற்பட்ட கைதிகள் விடுவிக்கவிக்கப்பட்டதில் ஒருவர்கூட தமிழ் அரசியல் கைதிகள் இல்லை. அதற்காக யாழ்ப் பல்கலைக் கழகத்தில் இருந்து மாணவர்கள் நடைப் பயணமாக அனுராதபுரம் சிறைச்சாலையை நோக்கிச் சென்றார்கள். அப்போது கிளம்பிய புழுதியைத் தான் தூசி என்கிறாரா என்.ராம்?**

‘சிறிலங்கா ரத்னா’ விருது வாங்கிய என்.ராமுக்கு தமிழர் பிரச்சனைப் பற்றி பேசினால், அது பிரிவினைக்குத் துணை செய்து ஒன்றுபட்ட இலங்கைக்கு ஊறு செய்துவிடும் என்ற எச்சரிக்கை உணர்வு இருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், இன்றைக்கு உலகில் உள்ள அரசுகளால் ஏற்கப்பட்ட ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை நிறைவேற்றாமல் இருப்பதைப் பற்றி ஒரு கேள்வியையும் கேட்க என்.ராமுக்கு ஏன் மனம் வரவில்லை? இராசபக்சேவே தனது உரையில் சிக்கல் சர்வதேசமயம் ஆகிவிட்டது என்று பேசியிருக்க, என்.ராம் இது பற்றி வாய்த் திறக்க மறுக்கிறார். ஒருவேளை ஐ.நா.மனித உரிமை மன்றத்தில் இலங்கையே ஒப்புக்கொண்ட தீர்மானத்தைத் தான் தூசி என்கிறாரா?

**என்.ராம் போன்றவர்கள் தான் இந்நாட்டின் முற்போக்கு ஊடகவியலாளர்கள். இந்துத்துவ எதிர்ப்புக்கு நிற்கக் கூடிய சனநாயகவாதிகள்.. முள்ளிவாய்க்கால் சாவுக் கணக்கு இவர்களைப் பொருத்தவரைப் புள்ளி விவரங்கள். அதுவும் 2.14 கோடி மக்கள் தொகைக் கொண்ட இலங்கை தீவை விட பரப்பில் 60 மடங்குப் பெரிய இந்தியாவின் முற்போக்காளர் அல்லவா இவர்**? 1,45,000 பேர் கொல்லப்படுவதெல்லாம் யானைகள் நடந்து செல்லும் போது எறும்புகள் சாவதற்கு ஒப்பானதென்றுதான் இவர்களது ’இந்திய விரிவாதிக்க மூளை’’ சிந்திக்கும். ஆனால், இவர்களுக்கு முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு முன்னான அரை நூற்றாண்டு இன அழிப்பு காலத்தில் அதன் ஆட்சியாளர்கள் பேசிய சிலவற்றை நினைவுபடுத்துவது அவசியம்.

1959 ஆம் ஆண்டு மே 20 ஆம் நாள், தமிழருக்கு எதிராகப் பெரிய வன்முறை வெடித்த போது, கொலையில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்தத் துப்பாக்கிச் சூடு நடத்த அனுமதி தருமாறு மாவட்ட அரசாங்க அதிபர் கேட்ட போது பிரதமர் பண்டாரநாயக்கா, “அதன் சுவையை அவர்கள் அனுபவிக்கட்டும் விடு” என்று சொன்னார். (“Let them vent their anger” இது குஜராத் கலவரத்தின் போது மோடி சொன்னதைப் போல் உள்ளதா?)

அதே கலவரத்தில் மே 25 ஆம் நாள் கிங்கொராகோட என்ற இடத்தில் தமிழர்கள் உயிருடன் எரிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அதை நேரில் பார்த்த சிங்களப் பத்திரிக்கையாளர் தார்சி வித்தாச்சி எழுதிய ‘Emergency 58: the story of Ceylon Race Riots’ என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறார்.

“At the Government farm at Hingurakgoda, too, the Tamil were slaughtered that night. One woman in sheer terror embraced her two children and jumped into a well. The rioters were enjoying themselves thoroughly. They ripped open the belly of a woman eight months pregnant, and left here to bleed to death. First estimates of the mass murders on that night were frightening 150-200 was a quick guess on the basis of forty families on an average of each”

எட்டு மாத கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைச் சிங்களக் கொலைக்கும்பல் பிழிந்து அந்தப் பெண் துடிதுடித்து இறக்கும் காட்சியை ரசித்தனராம். (இதே போன்ற ஒரு கொலை இஸ்லாமியப் பெண்ணுக்கு குஜராத் படுகொலையின்போது நடந்ததல்லவா?)

1981 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எரியூட்டப்பட்டது. அன்றைய முன்னணி அமைச்சர்களுள் ஒருவரான காமினி திசநாயக்கா, சிங்களக் காடையர்கள், படையினர், காவல் துறை எல்லோரும் சேர்ந்து நூலகத்தையும் அதிலிருந்த நூல்களையும் 96000 ஓலைச் சுவடிகளையும் எரித்தார்கள். ( பாபர் மசூதி இடிப்பு நினைவுக்கு வருகிறதா?)

1983 ஆம் ஆண்டு, கறுப்பு ஜூலைப் படுகொலைகள் பற்றி பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சிங்களர் எல்.பியதாச எழுதிய நூலுக்கு ‘Holocaust and after’ என்றே பெயர் வைத்தார்.

இப்படியாக இன அழிப்புப் படிபடியாக வளர்ந்து முழு இராணுவப் பரிமாணம் எடுத்து முள்ளிவாய்க்காலில் வான்வழிக் குண்டு வீச்சுகளாலும், கனரக ஆயுத தாக்குதலாலும் உணவு, மருந்து, தண்ணீர் போன்றவற்றைத் தடுத்து 1,45,000 பேரைக் கொன்றதோடு ஒரு முழுசுற்று நிறைவடைந்திருக் கிறது. இவற்றையெல்லாம் அறிந்த பின்பும் போர்க் குற்றங்கள், மாந்த குலத்திற்கு எதிரானக் குற்றங்கள் என்று ஏற்கத் தயாராக இல்லாத எவரும் இந்தியாவில் தலித்துகள் மீதான வன்முறைகளுக்கோ, இஸ்லாமியர்களுக்கு எதிரானப் படுகொலைகளுக்கோ எதிராக நிற்பதாக சொன்னால் அது ஏமாற்று!

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு சிங்கள நாகரித்தின் மீது விழுந்த தழும்பு. சிங்கள நாகரிகத்தின் மீது மட்டுமல்ல இந்தியர்களின் நாகரித்தின் மீது அதைத் தடுக்கத் தவறிய குற்றத்திற்காக படிந்துள்ள கறை. என்.ராம் போன்ற முற்போக்கு முகமூடியாளர்கள் வரலாறென்னும் கண்டிப்பான கிழவியிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்க வேண்டிய காலம் வெகுதொலைவில் இல்லை. ஏனெனில், ஹிரோசிமா, நாகசாக்கி மீது அணுகுண்டை வீசி இரண்டாம் உலகப் போரின் நாயகனாகவும் வல்லாதிக்க உலகின் தலைவனாகவும் முடிசூடிக் கொண்ட வட அமெரிக்காகூட எழுபத்தி ஒரு ஆண்டுகள் கழித்தேனும் தனது அதிபர் ஓபாமாவை 2016, மே 27 அன்று ‘ஹிரோசிமா அமைதி நினைவகத்திற்கு’ அனுப்ப நேர்ந்தது. அங்கு சென்ற ஒபாமா, ‘வானத்தில் இருந்து மரணம் வந்தது’ என்று பேச நேர்ந்தது. ‘ஒபாமா ஹிரோசிமா சென்றது தாங்கள் அணுகுண்டு வீசியதற்காக மன்னிப்புக் கோருவது என்று புரிந்து கொள்ளக் கூடாது’ என்று ஒபாமாவின் செய்தி தொடர்பாளர் எர்னெஸ்ட் விளக்கமளித்தார். ஆனால், உலகத்தின் முன்பு அணு குண்டு வீசிய குற்றத்திற்காக அமெரிக்கா மன்னிப்புக் கேட்டே ஆக வேண்டும் என்பது திண்ணம்.

அமெரிக்காவையே வரலாறு பணிய வைத்துக் கொண்டிருக்கும்போது தேசிய சமூகமாகவே உருப்பெறாமல், ஆயிரக்கணக்கான சாதிகளாக பிளவுபட்டப் படியே காலந்தள்ளிவிட முடியும் என்று நம்பும் இந்திய ஆளும் வர்க்கம் எம்மாத்திரம்? அதன் ஊதுகுழல்களாய் காலந்தள்ளி வரும் இந்துக் குழுமமும் என்.ராமும் இனப்படுகொலைக்கு துணைப் போனதோடு அதை மறைத்தும் திரித்தும் எழுதியதோடு இனக்கொலையாளி இராஜ பக்சேவைப் பாதுகாத்தார்கள் என்ற களங்கத்தோடு மன்னிப்புக் கோர நிர்பந்திக்கப்படக்கூடிய ஊழி இது.

ஏனெனில், ஈழத் தமிழர் பிரச்சனை என்பது படிந்து கிடக்கும் தூசியல்ல, முள்ளிவாய்க்காலிலும் வன்னிப் பெருநிலத்திலும் உறைந்து கிடக்கும் குருதி. அதை அவ்வளவு எளிதில் துடைத்துவிட முடியாது. ஆயிரமாயிரமாய் கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்களின் சாவு ஓலம் காற்றில் கரைந்துள்ளது. நீதியின் பால் அக்கறை கொண்ட தமிழர்களை அது தட்டி எழுப்பும். இன்று தூசியாகவும் கிள்ளுக் கீரையாகவும் இந்தியப் பேரரசப் பார்வைக்குள்ளால் பார்க்கப்படும் தாயகத் தில் உள்ள ஈழத் தமிழர்கள், தமிழ்நாட்டில் உள்ள ஈழத் தமிழர்கள், பிற நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள், தமிழ்நாட்டுத் தமிழர்கள் வரலாற்றின் உந்து சக்தியாய் எழுவர். 13 வயது சிறுவன் பாலசந்திரனின் சுட்டுக் கொல்லப் பட்டுக் கிடக்கும் புகைப்படம் கண்டு மாணவர் போராட்டம் எழும் என்று கனவிலும் கருதியிராத இராசபக்சே, என்.ராம் போன்றவர்களின் தூக்கத்தைக் கெடுக்கும் போராட்டங்கள் அலை அலையாய் எழும்!

**செந்தில், இளந்தமிழகம்**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## சங்கிகளின் கேள்விகளுக்கு நெத்தியடி பதில் (2)

# மதத்தைக் காப்பாற்ற உங்கள் கடவுள் வர மாட்டாரா?

ஓ. சுந்தரம்

*பெரியார் இயக்கத்தை நோக்கி சமூக வலைதளங்களில் பார்ப்பனிய சக்திகள் முன் வைத்து வரும் கேள்விகளுக்கு நெத்தியடி பதில்.*

**கேள்வி :** *'தாலி' அகற்றும் போராட்டம் நடத்திய உங்களுக்கு தாலியோடு இருக்கும் எவரும், அவர் கணவரும் திராவிடர் கழகத்திலிருந்து நீக்கப்படுவார்கள் என்றும், பெரியார் டிரஸ்ட் உறுப்பினர் பதவிக்கும் தகுதி இழக்கிறார்கள் என்றும் ஒரு அறிக்கை விடும் தைரியம் உண்டா?*

**பதில் :** கேள்வியே தவறானது. 'தாலி அகற்றும் போராட்டம்' என ஒன்று எக்காலத்திலும் நடத்தப்படவில்லை. நிற்க. 'தாலி' பற்றிய பெரியாரின் கருத்தென்பது, பெண்ணடிமை ஒழிப்பை மையமாகக் கொண்டது.

இந்து திருமணச் சட்டப்படி, ஓமம் வளர்த்து, தீயை வணங்கி, ஏழுமுறை சுற்றி வந்து, தாலி கட்டி, நீரை வார்த்து, அதாவது பெண்ணை ஆணுக்கு ஒரு பொருளாகத் 'தானம்' கொடுப்பதாக சட்டத்தில் இருந்து வந்தது. இந்த முறை, பெண்ணை போகப் பொருளாக மட்டுமே காட்டுவதாக உள்ளதால், இதனை எதிர்த்து சுயமரியாதைத் திருமணங்களை, தாலி மறுப்புடன் தந்தை பெரியார் நடத்தி வைத்தார். பல்வேறு போராட்டங்களுக்குப் பின், அறிஞர் அண்ணா அவர்களால் சுயமரியாதைத் திருமணச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, பெண்ணை இழிவு செய்யும் பார்ப்பன - வைதீகத் திருமண முறை ஒழிக்கப்பட்டது. எனினும், விரும்புவோர் அதனை மேற்கொண்டும் வருகின்றனர்.

வளர்ந்து வரும் கருத்துத் தெளிவின் காரணமாக, பெரியார் இயக்கச் சிந்தனை வயப்பட்டு, பெண்ணுரிமை போற்றும் முகமாக, இணையர் இருவரும் தாமாக முன் வந்து பல நூற்றுக்கணக்கில் பெண்ணடிமைச் சின்னமான தாலியை அகற்றி வருகின்றனர். பலர் தாலி கட்டாமலேயே மணம் புரிந்தும் வருகின்றனர். எவரையும் கட்டாயப்படுத்தியோ, போராட்டம் நடத்தியோ, பெரியாரியக்கத்தினர் இந்தத் தாலி அகற்றும் நிகழ்வை நடத்தியதில்லை. தமக்குச் சரியென பெண் ஏற்கும் நிலையிலேயே, சுதந்திரமான எண்ணத்துடன், தாமாகவே முன் வந்து இதனைச் செய்வதையே நாம் வரவேற்கிறோம். இந்த நிலையில், தாலி அகற்றுதலை நிபந்தனையாக்குவதோ, பெரியார் டிரஸ்ட் பதவிக்கு தகுதியாக்குவது பற்றிய கேள்விக்கோ இடமில்லை. என்றாலும், இத்தகைய கருத்துத் தெளிவுள்ள தோழியர்களும், தோழர்களுமே பெரியாரியக்கங்களின் பொறுப்புகளில் உள்ளனர் என்பதே உண்மை.

சரி; தாலிக்கு வாதாடும் நீங்கள், கணவர் இறந்தவுடன் தாலியை அறுப்பதற்கு ஒரு சடங்கையே நடத்துகிறீர்களே, இதற்கு என்ன பதில்?

**கேள்வி :** *எடுத்ததற்கெல்லாம் கட்சிகளுக்கு ஆதரவு கொடுக்கும் நீங்கள், கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் இந்த திராவிடக் கட்சிக்கு ஆதரவு கொடுக்க வேண்டாம் என்றும், உங்களை நம்பி நாங்கள் இல்லை என்றும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர் மட்டும் இந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுங்கள் என்றும் பிரச்சாரம் செய்யும் தைரியம் உண்டா?*

**பதில் :** 'கோபுர தரிசனம் மட்டும் செய்துவிட்டுப் போங்கள்' என எம் மக்களை இழிவுபடுத்திய பார்ப்பனிய இந்து - காவி - மதவாதக் கூட்டத்தை எதிர்த்துப் போராடி, கடவுள் மறுப்பாளர்களாகிய நாங்கள்தான், கடவுள் பக்தர்களாக உள்ள மக்களை கோயிலுக்குள் சென்று வழிபடுவதற்கான உரிமையைப் பெற்றுத் தந்தவர்கள்.

இன்று கருவறைக்குள்ளே சென்று, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வண்ணம் சட்டம் நிறைவேற்றப்படப் போராடியதும் பெரியாரும், அவர் இயக்கத்தவரும் தான்.

இந்த சாதி ஒழிப்பு - சமத்துவத்தைக் கொண்டுவர, நாடு முழுவதும் சாதி பேதமற்ற சமத்துவபுரங்களை உருவாக்க, தகுதி வாய்ந்த ஓர் ஆட்சி அமைந்திட வேண்டுமென்பதற்காகத்தான், கடவுள் நம்பிக்கையாளர்களையும் ஒருங்கிணைத்து செயல்படும் தி.மு.கழக ஆட்சி வரவேண்டும் என்பதற்காகவே பெரியார் தி.மு.க.வுக்கு ஆதரவளித்தார். உண்மைப் பெரியார் இயக்கங்களும் சமூக நீதி நிலைநாட்டப்பட, ஒடுக்கப்பட்ட மக்கள் உயர்வடைய எவர் பாடுபடுவார், யார் இந்த இனத்தின் பாதுகாப்பாய் வர இயலும் என எண்ணியே கட்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றன.

எந்த ஒரு ஆட்சிக்கும் பெரியார் தந்த ஆதரவுக்கு அடிப்படைப் பார்வை சமூகநீதிக் கொள்கையை எப்படிப் பின்பற்றுகிறது என்பதுதான். கடவுள், மத மறுப்பு என்பது சமுதாய மாற்றத்துக்கான இலட்சியம். அதற்கு மக்களை தயார் செய்வதே பெரியார் இயக்கம்.

சரி; நாங்கள் ஒரு கேள்வி கேட்கிறோம். கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே பா.ஜக.வுக்கு வாக்களித்தால் போதும்; மற்றவர்கள் வாக்கு தேவை இல்லை என்று பா.ஜ.க. அறிவிக்குமா? அப்படி அறிவித்தால், பா.ஜ.க.வையே கலைக்க வேண்டியிருக்கும். கடவுள் நம்பிக்கை என்பது உண்மையாகவே கடவுள்தான் இந்த உலகத்தைப் படைத்தார்; அவர் தான் உலகையே ஆட்டுவிக்கிறார் என்பதை நம்புவதாகும். விபூதிப் பட்டையும், நெற்றி நாமமும், பூணூலும், பூஜைகளும் கடவுள் நம்பிக்கை அல்ல; அவை மதத்தைக் காப்பாற்ற பக்தியை வெளிப்படுத்தும் அடையாளங்கள் மட்டுமே!

உலகைப் படைத்து மனித குலத்துக்கே மனு சாஸ்திரத்தை வழங்கியவர் பிரம்மா என்றால் (அப்படித்தான் மனு சாஸ்திரம் கூறுகிறது) அந்தக் கடவுள் 'பிர்மா' இந்து தர்மத்தைக் காப்பாற்ற மாட்டாரா? அதர்மம் நடக்கும் போதெல்லாம் அவதாரம் எடுத்து வருவேன் என்று கூறிய 'கிருஷ்ண பரமாத்மா' அவதாரம் எடுத்து வர மாட்டாரா? உங்கள் மோடியும், அமித்ஷாவும், மோகன் பகவத்தும், சுப்பிரமணிய சாமியும்தான் வர வேண்டும் என்றால், 'பிரம்மா'வையோ, கிருஷ்ணனையோ நீங்களே நம்பவில்லை என்று தானே அர்த்தம்? இது கடவுள் நம்பிக்கையா? கடவுள் மறுப்பா? பதில் சொல்லுங்கள்!

**கேள்வி :** *கடவுள் வழிபாட்டையும், சடங்குகளையும் எதிர்க்கும் நீங்கள் ஈ.வெ.ரா. சிலைக்குப் பிறந்த நாள் அன்று மாலை போடுவதையும், இறந்த நாளன்று மலர் தூவி மாலை போடுவதையும் நிறுத்த முடியுமா? அல்லது அண்ணாதுரை, காமராசர், எம்.ஜி.ஆர். சிலைகளுக்கு மாலை போடுவதையும், மலர் அஞ்சலி செய்வதையும் கேலி பேசியும், கண்டிக்கவும் உங்களிடம் திராணி இருக்கிறதா?*

**பதில்:** முதல் கேள்விக்குப் பதில் நிறுத்த முடியாது. மேலும் விமரிசையாகக் கொண்டாடுவோம். தந்தை பெரியார் சிலை என்பது மூடத்தனத்திற்கு எதிரான குறியீடு, அறிவுச் சுடருக்கு ஆதாரம், சமூகப் புரட்சிக்கு ஊக்கம், திராவிட இன மக்களின் சாதி இழிவுக்கு எதிரான போராட்ட வடிவம். பெரியார் சிலைகளைப் போற்றிப் பாராட்டி, மலர் தூவி, மகிழ்ந்து, சமூகக் களத்தில் போராடி வரும் போராளிகள் உறுதி எடுத்துக் கொண்டு, தொடர்ந்து பயணம் மேற்கொள்வதற்கான உணர்வைப் பெறும் நிகழ்வுகள் அவை. போராட்டக் களத்துக்கு வந்து பக்தி, மோட்சத்தில் இடம் பிடிப்பதற்கு அல்ல!

இரண்டாவது கேள்வி, அறிஞர் அண்ணா உள்ளிட்ட பெருமக்கள், தலைவர் தந்தை பெரியார் காண விரும்பிய தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்கள்; பெரியார் சிந்தனையைச் சட்டமாக்கியவர்கள்.

கல்விக் கண் தந்த காமராசரும், 'தமிழ்நாடு' பெயர் சூட்டி, வேத மதத் திருமண முறைக்கு வேட்டு வைத்து சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கி சரிதம் படைத்த அண்ணாவும், பெரியார் எழுத்துச் சீர்திருத்தம், தமிழ்ப் பல்கலைக்கழகம், இட ஒதுக்கீடு உயர்வு எனச் சாதனைகள் புரிந்த எம்.ஜி.ஆரும் எம் மக்களின் நன்றிக்கு உரியவர்கள். அதனை வெளிப்படுத்திட விழாக்கள் நடத்துவதும், பாராட்டிப் போற்றுவதும் நன்றி காட்டும் நற்செயல்களேயாகும். தவறில்லை.

பெரியாரும், அண்ணாவும், காமராசரும் மக்களுக்காக உழைத்த வர்கள் மட்டுமல்ல; மக்களால் நேரில் பார்க்கப்பட்டவர்கள். சிவனை யும் விஷ்ணுவையும், வினாயகனையும் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நாங்கள் எங்கள் தலைவர்களைப் பார்த்திருக்கிறோம்! பதில் சொல்லுங்கள்! வணங்கப்பட வேண்டியது கடவுள் சிலைகள் மட்டும்தான் என்றால், ஏன் பட்டேலுக்கு உலகத்திலேயே பெரிய சிலை வைத்து அரசுப் பணத்தைப் பாழடித்தீர்கள்? பதில் தேவை.

**கேள்வி :** *'இந்துக்களை' மட்டும் எதிர்க்கும் பழக்கத்தை உடைய நீங்கள் மற்றவர்கள் முட்டாள்கள், மட்டமானவர்கள், அறிவில்லாதவர்கள் என்று நினைக்கிறீர்களா? அல்லது அஞ்சுகிறீர்களா?*

**பதில் :** 'இந்துக்கள்' என்று யாரும் இல்லை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். 'இந்து மதம்' என்பது அனாமதேயம் என ஆரியப் பார்ப்பனர்களின் ஒரு பிரிவுக்குத் தலைமை தாங்கிடும் சங்கராச்சாரிகள் முதல், பார்ப்பனரால் போற்றப்படும் அக்னிஹோத்திரம் தாத்தாச்சாரியார், ஆச்சாரியார் வரை 'அவாளின்' அறிவுக் களஞ்சியங்களே ஆதாரத்துடன் நிறுவியிருக்கின்றனர்.

எனினும், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கடவுள், மத மறுப்பாளர்களான நாங்களும் சரி; நம்பிக்கையாளர்களும் சரி; ஜாதிகளாலேயே அடையாளப்படுத்தப்படுகிறோம். இதன் அடிப்படையிலேயே ஜாதியைப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவிற்குத் தீ வைத்துக் கொளுத்தி பெரியார் தொண்டர்கள் 4000 பேர் சிறைபட்டு, கொடுமைகளை ஏற்றனர் என்பது வரலாறு.

நிற்க, ஒரு வாதத்திற்கு 'இந்துக்கள்' என வைத்துக் கொண்டாலும், நாங்கள், இந்துவாகத் தம்மைக் கருதிக் கொண்டுள்ள பெரும்பான்மை 'இந்து மக்களின்' கல்வி, இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்பு, சமூக சமத்துவம், சமூக முன்னேற்றம் ஆகியனவற்றிற்காகப் போராடி வருகிறோம். ஆனால், இந்தப் பெரும்பான்மை 'இந்து' 'சூத்திர, 'பஞ்சமர்' மக்களின் முன்னேற்றத்திற்கு எதிராக - உச்சநீதிமன்றம் வரை சென்று வாதாடுவதும், இட ஒதுக்கீட்டை எதிர்ப்பதும், இம்மக்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதுமான காரியங்களில் ஈடுபடும் 'இந்துக்கள்' யார்? அவர்களே 'பிராமண' வருணபேதக் காவலர்களாக நடமாடி வரும் பார்ப்பனர்கள். அந்த வகை பார்ப்பன 'இந்துக்களுக்கே' நாம் எதிரியாகக் காட்சியளிக்கிறோம்.

மற்றபடி சனாதன சூழ்ச்சி அறியாது, சேற்றில் சிக்கியுள்ள எமது பெரும்பான்மை 'இந்து' மக்களுக்கு நாம் என்றும் தோழர்களே, எதிரிகளல்ல. அந்த அடிமை மதத்திலிருந்து வெளியே வாருங்கள் என்று விழிப்புணர்வூட்டிக் கொண்டே அவர்களின் மானத்துக்கும் உரிமைக்கும் போராடுகிறோம். பிற சிறுபான்மையினர், அறிஞர்களாக, வள்ளல்களாக, கல்வியறிவு பரப்பி எம் மக்களை சுயமரியாதைப் பெற்று வாழச் செய்யும் பெருமக்களாகவே திகழ்கின்றனர். எம் மக்களை உயர்த்துகின்றனர். இந்தச் சமூக மாற்றத்தில் எந்த 'இந்து' அமைப்பும் உண்மையாய் ஈடுபடுவதில்லை. சிறுபான்மையினர் எமக்கு தோழமையினர்தான்! அவர்கள் பார்ப்பனியத்துக்கு பலிகடாவாக மறுத்து, பல தலைமுறைகளுக்கு முன்பு உங்கள் மதத்துக்கு முழுக்குப் போட்டவர்கள்.

(தொடரும்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 1st March 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN